**லுனுகம்வெஹர பிரதோச சபை**
**ஹம்பந்தோட்டை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்பித்திருந்ததுடன், அந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து லுனுகம்வெஹர பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(அ) திண்ம கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்தின் நிர்மாண வேலைகளுக்காக மேற்கொள்ளபட்ட செலவுகள் ரூபா 1,526,667 தொகை நன்கொடையாக கிடைத்திருந்த ரூபா 303,580 தொகைக்கான கணனிகளின் பெறுமதி மற்றும் ரூபா 81,315 தொகைக்கு கொள்வனவு செய்திருந்த அலுவலக உபகரணங்களின் பெறுமதி என்பவற்றை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) சபையில் கடமையாற்றிய ஊழியர் ஒருவரிடம் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 39,966 இற்கான ஊழியர் கடன்தொகை மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுகளுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட காகிதாகிகள் இருப்பின் பெறுமதி ரூபா 31,391 தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

#### 1.3.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

நீண்ட காலமாக அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 82,200 தொகைக்கான நிலுவை அனுமதிப் பத்திர கட்டணத்தை அறவீடு செய்வதற்கு மற்றும் 2015 ஆண்டின் போது தேர்தல் கடமைகளுக்காக செலுத்தியிருந்த ரூபா 21,238 தொகையினை தேர்தல்கள் ஆனையாளரிடம் மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்ககுகள்**

கடந்த ஆண்டு நிறைவேற்றியிருந்த 03 நிர்மாண வேலைகளுக்காக செலுத்த வேண்டியிருந்த கூட்டுத் தொகை ரூபா 283,221 தொகை மற்றும் சபையில் கடமையாற்றாத உத்தியோகத்தர்கள் மூவருக்கு செலுத்த வேண்டிய ரூபா 53,888 தொகைக்கான ஊழியர் பிணை என்பவற்றை செலுத்தி தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.3.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

இயந்திர உபகரண வாடகை வருமானப் பதிவேடு சமர்பிக்கப்படாமையினால் கூட்டுத்தொகை ரூபா 1,260,719 தொகைக்கான இயந்திர உபகரண வருமானத்தை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்று செய்யவதற்கு முடியாதிருந்தது.

### 1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்பங்கள் கீழே காணப்படுகின்றன

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்க ளுடன் தொடர்பு | பெறுமதி<br>ரூபா | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரை கட்டண (விஷேட) ஏற்பாட்டு சட்டத்தின் மற்றும் 2008 ஜனவரி 01 திகதிய 1530/13 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமாணி | | ரூபா 25,000 இனை மிகைத்த கொடுப்பனவுகளின் மீது ரூபா 25 முத்திரை வரி அறவிடப்பட வேண்டு மெனினும் சபையின் உத்தியோகத்தர் களுக்கு சம்பளம் செலுத்தும் போது முத்திரை வரி அறவீடு செய்திருக்க வில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் | | |
| (i) பிரமாண இலக்கம் 103(1)(ஆ) மற்றும் பிரமாண இலக்கம் 104(1) | 37,300 | சபைக்கு செந்தமான லொறி பவுசர் ஒன்று 2017 ஆகஸ்ட் 14 ஆம் திகதி விபத்திற்கு உள்ளாக திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. |
| (ii) பிரமாண இலக்கம் 104(4) | 204,695 | சபைக்கு சொந்தமான கப் வண்டி ஒன்று 2017 திசெம்பர் 15 திகதி விபத்துக்கு உள்ளாகி திருத்தியிருந்த போதிலும் முழுமையான அறிக்கையொன்று சமர்பித்திருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | 2016 திசெம்பர் 29 திகதியில் 30/2016 இலக்க சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான எட்டு வாகனங்களின் எரிபொருள் எரிதல் பரிசோதனை செய்திருக்கவில்லை. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 676,811 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,017,676 தொகை ஆக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பாக தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| வருமான மூலம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) வீதவரியும் வரியும் | 332,500 | 327,985 | 320,958 | 7,000 | 251,500 | 318,290 | 318,290 | - |
| (ii) வாடகை | 2,876,600 | 3,353,360 | 3,233,935 | 123,425 | 2,776,600 | 2,113,057 | 2,122,847 | 64,810 |
| (iii) அனுமதிப்பத் திர கட்டணம் | 339,900 | 763,230 | 733,880 | 24,000 | 296,500 | 553,945 | 548,595 | 5,350 |
| (iv) ஏனைய வரு மானங்கள் | 4,652,200 | 2,639,815 | 3,163,325 | 593,335 | 3,134,600 | 2,853,677 | 1,736,832 | 1,116,845 |
| மொத்தம் | 8,201,200 | 7,084,390 | 7,452,098 | 747,760 | 6,459,200 | 5,838,969 | 4,726,564 | 1,187,005 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

மீளாய்வாண்டின் போது சிட்டையிடப்பட்ட மொத்த வருமானம் ரூபா 7,084,390 தெகையாக காணப்பட்டதுடன், ஆண்டின் போது நிலுவை வருமானம் உட்பட ரூபா 7,452,098 தொகை சேகரிக்கப்பட்டிருந்தது. வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 747,760 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டது.

### 2.2.3 வீதவரி மற்றும் வரி

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 134(1) பிரிவின் பிரகரம் வீதவரி அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.4 வாடகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 113,300 இற்கான நிலுவை கடை வாடகையில் 2018 ஜுன் 11 திகதி அளவில் ரூபா 71,500 தொகை மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஆ) இடையறாது மாதாந்த வாடகை நிலுவையாக காணப்பட்ட போதிலும் நிலுவை வாடகை அறவீடு செய்வதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 159(1) பிரிவின் பிரகாரம் மற்றும் உன்படிக்கையின் நிபந்தனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 2015 செப்டம்பர் 21 திகதி தொடர்ந்து வரும் 2 வருடங்களுக்கு செல்லுபடியாகும் பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் லுனுகம்வெஹர புதிய நகர கடை ஒன்றின் கடை வாடகை ரூபா 2000 தொகை எனினும் ரூபா 1,000 வீதம் வாடகை அறவிடப்பட்டமையால் மீளாய்வாண்டிற்கான ரூபா 300,000 தொகை வருமானமொன்றினை இழந்துள்ளது.

### 2.2.5 அனுமதிப் பத்திர கட்டணம்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 150(2) பிரிவின் பிரகாரம் சபையின் அதிகார பிரதேசத்தில் தொழில்புரியும் திறந் தொழிலாளர்களிடம் கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2017 திசெம்பர் 31 திகதி உள்ளவாறு பெறவேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 230,000 தொகை காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

1987 இன் 15 ஆம் இலக்க சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது பெருந்தெருக்கல் தொடர்பாக விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொது மக்களின் சுகபோக வாழ்வு, வசதிகள் மற்றும் நலனோம்பு என்பன சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளை நிறைவேற்றுதல் தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) நிறைவேற்றபடாத செய்பணிகள்**

2017 ஆண்டின் பாதீட்டில் அடங்கியுள்ள பிரதேச சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த 50 அபிவிருத்தி செயற்திட்டங்கள் 10 செயற்திட்டங்களில் மாத்திரம் மீளாய்வாண்டின் போது நிறைவேற்றபட்டிருந்தன.

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரல் நிலைபேறான குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கான உலகலாவிய சுட்டிகளின் ஊடாக அதிகார பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்க்கை தரம் மற்றும் சுகாதாரத்தினை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ திறமையின்மை**

**வீதி விளக்குகள் பராமரிப்பு**

சபையினால் பராமரிக்கப்படும் வீதி விளக்குகளை இனங்காண்பதற்காக வீதி விளக்குகள் தொகை மதிப்பீடு ஒன்று மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது வீதி விளக்குகள் பராமரிப்புக்காக ரூபா 209,255 இற்கான தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. 2010 ஆகஸ்ட் 17 திகதி பீஈ/01/01 ஆம் இலக்க மின்சக்தி மற்றும் வலுச் சக்தி அமைச்சின் சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க வீதி விளக்குகளின் பராமரிப்பு செலவுகளை மீளளிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.3 மனித வள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி உள்ளவாறு அங்கீகரிக்கபட்ட பதவியணியை சேர்ந்த 07 பதவிகளில் காணப்பட்ட 11 வெற்றிடங்களை நிரப்புவதற்கு சபையினால் உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) சபைக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள் 08 அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் நான்கு வருடங்களை விட மிகையான காலம் முதல் இரண்டு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மாத்திரம் கடமையாற்றி வருகின்றனர். இந்த நிலைமை காரணமாக சபையின் நாளாந்த விடயங்களை நிறைவேற்றுவதற்காக வசதியீனங்களை எதிர் நோக்க நேரிட்டிருந்த போதிலும் 2018 பெப்ரவரி 33 திகதி அளவிலும் இந்த சிக்கலுக்கு தீர்வு ஒன்று வழங்கியிருக்கவில்லை. முடியாதிருந்தது.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 உரித்தாக்கப்படாத சொத்துக்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கபட்டன.

(அ) சபையினால் பயன்படுத்தப்படும் 09 கட்டிடங்களின், 24 சனசமூக நிலையங்களின், 07 காணிகளின், 21 மயானங்களின் மற்றும் 8 வாகனங்களின் சட்டரீதியான உரிமை சபைக்கு உரித்தாக்கவதற்காக 2018 மார்ச் 23 திகதி வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) லுனுகம்வெஹர பிரதேச செயலாளரினால் பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த ரனஸின்ஹபுர மூலிகை தோட்டத்தில் வெளி தரப்பினரினால் அனுமதியற்ற பயிர் செய்கைகள் நடப்படுள்ள என இடப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டதுடன், அந்த தரப்பினர் காணிக்கு உள்ளே செல்வதற்கு இயலதாவாறு காணியை சுற்றி தென்னை ஒலைகளை மறைத்து வேயப்பட்டிருந்தது.

(இ) சபையினால் பயன்படுத்தப்படும் மற்றும் பல்வேறு தரப்பினால் சபைக்கு ஒப்படைக்கபட்டிருந்த காணிகளின் மற்றும் கட்டிடங்களை அறுதியாக இனங் காண்பதற்காக மற்றும் அந்த சொத்துக்களை பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்தல் , நீண்ட காலமாக நடைபெற்றிருக்காததுடன், இது தொடர்பாக விரைவான மற்றும் முறையான வேலைத் திட்டம் ஒன்று தயாரிப்பதற்காக சபையின் கவனம் செலுத்தப்பட வேண்டியிருந்தது.

### 3.4.2 விளைவற்ற சொத்துக்கள்

சபைக்கு சொந்தமான மஹேந்திர கப் வண்டி 2014 ஆண்டு முதல் மற்றும் 02 குப்பை வண்டிகள் ஒரு வருடத்தை விட கூடிய முதல் செயற்படாது காணப்பட்டது.

### 3.4.3 நிலையான சொத்துக்களின் கணிப்பீட்டு விதப்புரைகள் செயற்படுத்தாமை

2016 ஆண்டளவில் நிலையான சொத்துக்களின் கணிப்பீட்டு அறிக்கைகளில் காணப்படும் வீரவில சந்தை காணியை அபிவிருத்தி செய்தல், சந்தை வளவை தயாரித்து வாராந்த சந்தையை திறத்தல் மற்றும் ஏனைய விதப்புரைகளை 2018 மார்ச் 23 திகதி அளவிலும் செயற்படுத்தியிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகள் இடையே கீழ் வருமாறு கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான நிதிக் கட்டுபாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(அ) ஐந்து வருமான விடயங்களில் பிரதி கூலமான முரண்களின் கூட்டுத்தொகை ரூபா 14,176,857 தொகை காணப்பட்டதுடன், அப்பெறுமதி 03 சதவீதம் முதல் 57 சதவீதம் வரையான பெறுமதியான வீச்சில் காணப்பட்டது.

(ஆ) 05 செலவு விடயங்ளில் சேமிப்புகளில் கூட்டுத்தொகை ரூபா 7,460,237 தொகையாக காணப்பட்டதுடன், அப்பெறுமதி 12 சதவீதம் முதல் 62 சதவீதம் வரை பெறுமதியான வீச்சில் காணப்பட்டது.

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

2009 ஜுன் 09 திகதிய DMA/2009(i) ஆம் இலக்கம் கொண்ட முகாமைத்துவக் கணக்காய்வு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் குறைந்த அளவு குழுக் கூட்டங்கள் 04 நடாத்தப்பட வேண்டுமெனினும், மீளாய்வாண்டிற்காக 02 குழுக் கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுபாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமை | | குறைபாடு |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | (i) | கணக்கு மீதிகள் கைவிடப்பட்டு மற்றும் குறைவாகவும் மிகையாகவும் காட்டப்பட்டிருந்த சந்தர்பங்கள் காணப்பட்டன. |
| | | (ii) | நிலையான சொத்துக்களை மூலதனப் படுத்தாத சந்தர்பங்கள் காணப்படல். |
| (ஆ) | வருமான நிருவாகம் | (i) | வீதவரி பெறுமதி மதிப்பீடு செய்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| | | (ii) | புதிய வருமான உருவாக்கும் வழிகளை இனங்காணாமை. |
| (இ) | ஊழியர் முகாமைத்துவம் | | பதவியணி வெற்றிடங்களை நிரப்பியிருக்காமை. |
| (ஈ) | சொத்துக்கள் முகாமைத்துவம் | (i) | சபைக்கு ஒப்படைக்கபட்டுள்ள சொத்துக்களின் பாதுகாப்பினை உறுதிபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| | | (ii) | இரண்டு வாகனங்கள் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டல். |
| | | (iii) | 8 வாகனங்களின் உரிமையயை உரித்தாக்கி இருக்காமை. |
| (உ) | பாதீட்டு கட்டுபாடு | (i) | சில செலவு விடயங்களில் மதிப்பீட்டு ஏற்பாடுகள் முழுவதும் சேமிக்கப்படல். |
| | | (ii) | பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவு விடயங்களிடையே கணிசமான அளவு முரண்கள் காணப்படல். |
| | | (iii) | பாதீட்டு இலக்குகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |